**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.**

**முன்னிலை :** செல்வி. சே.தா. ஆயிஷ் பேகம், பி.ஏ., பி.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, செய்யாறு.

2024ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26ம் நாள் திங்கட்கிழமை

**இடைநிலை மனு எண். 10/2024-ன் அசல் வழக்கு எண்.06/2019**

திரு.எஸ்.பெருமாள், த/பெ. திரு.சோமசுந்தரம் ..... மனுதாரர்/வாதி

/எதிர்/

திரு.எல்.பழனி, த/பெ. திரு.லோகநாதன் ... எதிர்மனுதாரர்/ பிரதிவாதி

இம்மனு 21.02.2024 தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/ வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு.எஸ்.கார்த்திகேயன், அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/ பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஜி.குணசேகரன், அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதம் கேட்டுக்கப்பட்டு, மனு ஆவணங்களைப் பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 14 (3)-ன் கீழ் மனுவில் கண்டுள்ள ஆவணத்தை காலதாமதமாக தாக்கல் செய்வதை மன்னித்து ஏற்று தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி இம்மனு மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:-**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி. தாவா சொத்திற்கு அருகில் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் உள்ளது. அந்த சொத்துக்கள் மூல ஆவணங்களைவிட அதிகப்படியாக ஆவணங்கள் உருவாக்கப்பட்டு தற்போது மனுதாரருக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தை அத்துமீறி பிரவேசித்து ஆக்கிரமிப்பு செய்துள்ளார். அவ்வாறு செய்து மாண்பமை செய்யாறு சார்பு நீதிமன்றத்தில் மனுதாரர் பேரில் அசல் வழக்கு எண்.224/2018 என்ற வழக்கை தாக்கல் செய்து அவர் ஏற்படுத்திய தவறான ஆவணத்திற்கான உரிமைக்கோரி வருகிறார். அந்த வழக்கில் மனுதரருடைய சொத்தின் பின்புற அளவும், பிரதிவாதியின் சொத்தின் பின்புற அளவும் 10.2 மீட்டர் என்பதை ஒப்புக்கொண்டு

வாக்குமூலம் அளித்துள்ளார். ஆனால் இந்நீதிமன்றத்தில் தவறான அளவுகள் குறித்து வாக்குமூலம் அளித்துள்ளார். அதை நிரூபிக்கும் பொருட்டு அந்த வாக்குமூலத்தின் நகலை தற்போது மனுதாரர் தாக்கல் செய்துள்ளார். எனவே அந்த ஆவணத்தை மனுதாரர் தரப்பு ஆவணமாக ஏற்று உத்தரவு பிறப்பிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **எதிர்மனுதாரர் தரப்பு எதிருரை சுருக்கம்:-**

எதிர்மனுதாரர் தரப்பில் இடை மனு எண்.8/2024ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையை இம்மனுவின் எதிருரையாக ஏற்பதாக குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது மனுதாரரின் மனு சட்டப்படி செல்லத்தக்கதல்ல. இவ்வெதிர்மனுதாரரின் 10.2 மீட்டர் குறித்த சாட்சியத்தை அடிப்படையிலேயே புரிந்துகொள்ளாமல், இந்நீதிமன்றத்தில் அந்த சாட்சியத்தை தாக்கல் செய்து, இந்நீதிமன்றத்தில் மேற்படி வழக்கினை தொடர்ந்து நடத்தாமல் இழுத்தடிப்பு செய்வதற்காக மனுதாரரின் முதல் சாட்சியத்தை மட்டும் நகல் பெற்று ஆவணமாக தாக்கல் செய்துள்ளார். இதனை சட்டப்படி மனுதாரர் தாக்கல் செய்ய அருகதையற்றவர் ஆவார். அதேபோன்று இவ்வெதிர்மனுதாரரின் சாட்சியத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு, மனுதாரரை மீண்டும் அழைத்து விசாரித்தால் தான் நல்லதொரு நியாயம் கிடைக்கும் என்ற சட்ட நடைமுறைக்கு பொருந்தாவண்ணம் இந்திய சாட்சிய சட்ட இறையாண்மைக்கு எதிராக மனுதாரர் மனு தாக்கல் செய்துள்ளது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. இவ்வெதிர்மனுதாரரின் சாட்சியத்தை மனுதாரர் நேரடியாக குறியீடு செய்வதற்கு சட்டவகைமுறைகள் கிடையாது. எனவே இம்மனுவினை இவ்வெதிர்மனுதாரர் செலவுத்தொகையோடு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் மாண்பமை செய்யாறு சார்பு நீதிமன்றத்தில் பிரதிவாதி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், அந்த வழக்கில் மனுதாரர்/வாதியின் நிலத்தின் அளவு குறித்து சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ளதாகவும் அந்த சாட்சியத்தை தற்போது மனுதாரர் தரப்பு ஆவணமாக தாக்கல் செய்துள்ளதாக அதை கோப்பிற்கு பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் வாதிட்டார்.

5. எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் மனுதாரர் இம்மனுவோடு தாக்கல் செய்துள்ள ஆவணம் இவ்வழக்கிற்கு ஏற்புடையது அல்ல மனுதாரர் எதிர்மனுதாரர் சாட்சியத்தில் முதல் விசாரணையை மட்டும் தாக்கல் செய்துள்ளார் என்றும் குறுக்கு விசாரணை குறித்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை, எதிர்மனுதாரர் தன்னுடைய சொத்திற்கு விளம்புகை செய்ய கோரி செய்யாறு மாண்பமை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், அந்த சொத்து குறித்து அந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளதாகவும், எனவே அதை இவ்வழக்கிற்கு ஏற்க இயலாது என்றும் எனவே இம்மனுவினை செலவுத்தொகையோடு தள்ளுபடி செய்யுமாறு வாதிட்டார்.

6. மனுதாரரின் மனு எதிர்மனுதாரரின் எதிருரை மற்றும் வழக்காவணங்கள் ஆகியவற்றைப் பரிசீலனை செய்ததில் இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்?

## 7.தீர்வு-

இருதரப்பு வாதங்கள், மனு எதிருரை மற்றும் வழக்காவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்ததில், மனுதாரர் மாண்புமிகு செய்யாறு சார்பு நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர் கொடுத்துள்ள சாட்சியத்தை தன் தரப்பு ஆவணமாக பெற்றுக்கொள்ள வேண்டும் என்று இம்மனு தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி ஆவணத்திற்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று ஆட்சேபிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணத்தை ஆராய்கையில் எதிர்மனுதாரர் செய்யாறு மாண்பமை சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.224/2018ல் அளித்துள்ள முதன்மை சாட்சியத்தின் நகல் மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளதை தன் தரப்பு ஆவணமாக பெற்றுக்கொள்ள வேண்டி தாக்கல் செய்துள்ளார். மேலும் அந்த ஆவணம் 8ம் மாதம் 2022ம் வருடம் மனுதாரருக்கு நகல் வழங்கப்பட்டுள்ளதாக கண்டுள்ளது. மேற்படி ஆவணம் காலதாமதமாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதற்கான காரணங்கள் குறித்து ஏதும் குறிப்பிடவில்லை. மேலும் மாண்பமை சார்பு நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர் /பிரதிவாதி தன்னுடைய சொத்தை விளம்புகை செய்ய கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். அந்த வழக்கில் எதிர்மனுதாரர் முதல்விசாரணை மட்டும் மனுதாரரால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி சாட்சியத்தில் குறுக்கு விசாரணை குறித்த ஆவணம் ஏதும் தக்கல் செய்யப்படவில்லை.

8. மேலும் மனுதாரர் இத்தாவாவை சொத்து தன்னுடையது என்று விளம்புகை செய்ய கோரி தாக்கல் செய்துள்ளார். மேற்படி இத்தாவாவை ஆவணத்தின் அடிப்படையில் நிரூபனம் செய்ய வேண்டிய பொறுப்பு மனுதாரருடையது. இவ்வழக்கில் எதிர்மனுதாரர் சாட்சியம் அளித்து இந்நீதிமன்றத்தில் உள்ளது. மேலும் மாண்பமை சார்பு நீதிமன்றம், செய்யாறில் நிலுவையில் உள்ள வழக்கின் பரிகாரமும், இவ்வழக்கின் பரிகாரமும் வெவ்வேறானது. மேலும் அவ்வழக்கு சொத்தும் இவ்வழக்கு சொத்து வெவ்வேறானது. எனவே உரிய கிரைய ஆவணம் மற்றும் வருவய்துறை ஆவணங்கள் வாயிலாக மனுதாரர் தன்னுடைய வழக்கை நிரூபணம் செய்ய வேண்டியது அவசியமாகிறது. மேலும் மாண்பமை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளபோது தரப்பினர்கள் அளித்துள்ள சாட்சியம் ஏற்புடையதா இல்லையா என்பது குறித்து இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கில் பரிசீலிக்க இயலாது. அவ்வழக்கில் சாட்சியத்தின் அடிப்படையில் தீர்வு காணப்பட்டால்தான் வழக்கில் தரப்பினர்கள் ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளதை இதர வழக்குகளில் முரன்தடை கோட்பாட்டின்கீழ் ஆவணங்களாக பரிசீலிக்க இயலும். ஒரு சாட்சியம் நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதை நீரூபனம் செய்தால் மட்டுமே அந்த சாட்சியம் இதர வழக்கில் ஏற்புடையதா என்பது குறித்து பரிசீலிக்க இயலும். எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கப்படுவதற்கான எந்தவிதமான முகாந்திரமும் இல்லை. எனவே நீதியின் நலன்பால் இம்மனு தள்ளுபடிக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. மனுவின் தன்மையை கருத்தில் கொண்டு உபயதரப்பினர்கள் அவரவர்களே மனுவின் செலவுத்தொகையை ஏற்கவேண்டியது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**முடிவாக,** இம்மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்த பின்னர் 2024-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 26-ம் நாளான இன்று இந்நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

(ஒம்). சே.தா. ஆயிஷ் பேகம்,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> :-**

- இல்லை -

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u>:-**

- இல்லை -

(ஒம்). சே.தா. ஆயிஷ் பேகம்,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.